# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

India's National Spiritual Newspaper

REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | APRIL 2023 | No. 04


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 113:1-9

1. அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள்; கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்.
2. இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.
3. சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.
4. கர்த்தர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர்; அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது.
5. உன்னதங்களில் வாசம் பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவர் யார்?
6. அவர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார்.
7. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.
8. அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்.
9. மலடியைச் சந்தோஷமான பிள்ளைத் தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். அல்லேலூயா.

## உண்மையான எழுப்புதல்!

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)

பொதுவாகக் கிறிஸ்தவ வட்டாரங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் **எழுப்புதல்** என்ற வார்த்தையை, நான் பயன்படுத்திவரும் தமிழ் மொழி வேதாகமத்தில் தேடிப்பார்த்தபோது எனக்குக் கிடைக்கவில்லை. ஆங்கிலத்தில் இதன் மொழியாக்கம் revival என்று பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு பெரிய வேதபாடமாகும். இந்தியாவில் ஆவிக்குரியக் கூட்டங்களைக் குறிப்பிடும்போது, சுவிசேஷக் கூட்டம் என்றும், எழுப்புதல் கூட்டம் என்றும், படை முயற்சிக் கூட்டம் என்றும் பலவாறாகக் கூறுவதுண்டு. வேறுசில நாடுகளில் இத்தகையக் கூட்டங்களை 'revival' அல்லது 'எழுப்புதல்' என்று சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் நான் உங்களோடு இங்குப் பகிர்ந்துகொள்ளப்போகிற செய்தி, பொதுவாக நம் தேசங்களில் தேவனால் ஊற்றப்படுகிற ஆவிக்குரிய பின்மாரி அல்லது ஆவியானவரால் கொண்டு வரப்படும் மறுமலர்ச்சி அல்லது ஆவிக்குரிய விழிப்புணர்வு ஆகும்.

இந்த revival என்கிற வார்த்தையானது லத்தீன் மொழியிலிருந்து வந்தது என்று கருதப்படுகிறது. ஆங்கிலத்தில் revival என்றால் மறுபடியும் உணர்வுக்குக் கொண்டு வருதல் என்று அர்த்தம். Vivo என்றால் உயிர் கொடுத்தல் அல்லது உயிர் அடைதல் அல்லது உயிர் பெறுதல் என்று அர்த்தம். அதாவது மரித்துப்போகும் தருவாயில் இருந்து மறுபடியும் உயிர் அடைதல் ஆகும். உயிரற்ற ஒரு சடலத்துக்கு அல்ல; உயிருடன் வாழ்ந்த ஒருவரின் சரீரம் செயலிழந்த நிலையில் இருந்ததைச் செயல்படச் செய்வது எனலாம். மாரடைப்பால் ஒருவர் இருதயம் செயல்படாதுப் போகும்போது தகுந்த சிகிச்சை அளிப்பதன் மூலம் இருதயத்தை மீண்டும் செயல்படச் செய்வது (revive) போன்றதாகும். இவ்வாறு 'உயிர் மீட்சி'

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

CHIEF EDITOR
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.
MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
ADMINISTRATION
Bro. N. Prakasam, M.A., General Manager
EDITORIAL BOARD
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran
EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858
CORE LEADERS
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah
E.mail ID
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call

**. . . பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; . . .** (ஏசாயா 58:14)

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

உங்களுக்கு நன்மைகள் வந்து சேரும்! தைரியமாயிருங்கள்!!

உலக நாடுகளில் சுவிசேஷப் பணிகள் வேகமாய் செயல்படுகின்றன. நாம் மாத்திரமல்ல ஏராளமான சபைகளும், பல்வேறு கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் தங்கள் ஊழியர்களைத் தங்கள் பணித்தளங்களுக்கு அனுப்பி பாவத்திலும், வியாதியிலும், தரித்திரத்திலும் கட்டப்பட்டிருக்கிற மக்களை விடுவித்து வருகின்றன. இந்த அமைப்புகளுக்காகவும், ஊழியம் செய்கிற எல்லா தேவ ஊழியர்களுக்காகவும் ஊக்கமாக ஜெபித்து, இயன்ற எல்லா உதவிகளையும் நாம் செய்ய வேண்டும். சபைப் பாகுபாடுகளை முற்றிலும் ஒழித்து, அவற்றை மறந்து ஓரணியில் நின்று செயல்படுவோமாக.

கடந்த ஜனவரி 26ம் தேதியன்று நம்முடைய **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** முன்னாள் மாணவர், போதகர் J. இராஜாமணி அவர்களையும், அவர்களுடைய மனைவி போதகர் R. விமலா அவர்களையும் தேவ ஊழியர்களாக பிரதிஷ்டைப் பண்ணி பழவேற்காடு என்ற ஊரில் ஊழியர்களாக நியமித்த ஆராதனை மிகவும் சிறப்பாக நடந்தது. அங்குக் கட்டப்பட்டுள்ள தேவனுடைய சபையையும், ஊழியர் வீட்டையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபிப்போமாக. இப்படியாக இந்தியாவில் உள்ள எல்லா கிராமங்களிலும் ஊழியர்களும், சபைகளும் எழும்ப வேண்டும். சுமார் 7,00,000 கிராமங்கள் உள்ளதாக ஒரு செய்தியைப் பார்த்தோம். சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத மக்களை நாம் எப்படியாவது விரைந்து சந்திக்க வேண்டும்.



**புதிய தேவாலயத்தின் பிரதிஷ்டை**

### அழைப்பின் எதிரொலி குடும்பத்தாரின் பங்கு

இந்த நாட்களில் உண்மையாய் சுவிசேஷப் பணிகளில் ஈடுபட்டு மக்களை அழிவினின்று மீட்டு, அவர்களை நல்வழியில் நடத்தும் தேவ ஊழியர்கள் மிகவும்



**அழைப்பின் எதிரொலி தலைமையக ஊழியர்கள்**

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Media Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development



தேவ ஊழியர் – சுவிசேஷப் பணியில்

கஷ்டப்படுகிறார்கள். ஆவியிலும், சரீரத்திலும் சத்துரு அவர்களை அதிகமாகத் தாக்குகிறான். அதிகமாகப் பாடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட மக்களுடைய அடிப்படைத் தேவைகளை சந்தித்தே ஆக வேண்டும். உங்களுக்குத் தெரிந்த தேவ ஊழியர்களுக்கு உங்கள் பணத்தாலும், சரீர உழைப்பாலும் உதவி செய்யுங்கள். செல்வந்தராக இருக்கிற ஏராளம் ஊழியர்கள் பலர், தங்கள் ஆரம்பகால அழைப்பையும், தரிசனத்தையும் இழந்து, தங்கள் வசதிகளைப் பெருக்குகிறவர்களாகவும், சொத்துக்களை சேர்க்கிறவர்களாகவும், தேவ ஊழியம் என்கிறப் பெயரில் தேவைக்கு மிஞ்சி பெரும் செலவில் பெரியக் கட்டடிடங்களைக் கட்டுகிறவர்களாகவும் திசைமாறிச் செல்லுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குச் செய்யும் உதவிகளை நிறுத்திவிட்டு, ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களை மட்டுமே கண்டுபிடித்து அவர்களைத் தாங்குங்கள். அவர்களுடன் தோள் கொடுத்து நில்லுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

நாள்தோறும் கிறிஸ்து இல்லாத வாழ்க்கையின் விளைவாக கோடிக்கணக்கான மக்கள் நரகத்திற்கு நேராகச் செல்வதைக் கண்கூடாகக் காண்கிறவர்களும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எந்த நிமிடத்திலும் எதிர்பார்க்கும் நிலையினைப் பிரசங்கிக்கிறவர்களுமான தேவ ஊழியர்கள் சிலர், நீண்ட காலத் திட்டத்துடன் கோடிக்கணக்கான பணச் செலவில் பெரியச் கட்டிடங்களை கட்டுவதும், பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதும் தேவையா? இது பெரிய ஏமாற்றுத்தனம் அல்லவா? ஊழியத் தலைவர்கள் இப்படிச் செய்யலாமா? இவற்றை யோசித்து, ஏழை ஊழியர்களையும், உண்மை ஆத்தும ஆதாயம் செய்யும் ஏழை ஊழியர்களையும் தாங்குவதே சாலச் சிறந்தது.

ஒரு சைக்கிள் கூட இல்லாத ஊழியர்களையும், கூரை மற்றும் தரை இல்லாத சிறிய தேவாலயங்களையும் அடுத்த நேர ஆகாரத்திற்குக் கூட ஆண்டவரை நம்பி வாழ்கிற உண்மை ஊழியர்களையும் கண்டுபிடிப்பது ஞானம்! நம்மை யாரும் வஞ்சித்து விடாதபடி நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தங்கள் தொழில் ரீதியான புத்திசாலித்தனத்தைத் தங்களின் தந்திரமான திட்டங்களால் ஊழியங்களையும், ஆண்டவரையும் வியாபாரப் பொருளாக மாற்றி விட்டவர்களை அடையாளம் கண்டு, கருத்துடன் செயல்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

நம்முடைய **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** தரத்தை உயர்த்தவும், இன்னும் ஏராளம் புதிய ஊழியர்களை உருவாக்கவும், நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியில்** B.Th. பட்டப்படிப்பை நடத்தவும் தீர்மானித்துள்ளோம். இதற்கு முன்னோடியாக B.Th. Online கல்வியை ஆங்கிலத்தில் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளோம். இதனை உங்கள் சபைகளிலும், அறிமுகமானவர்கள் மத்தியிலும் பகிர்ந்து ஏராளம் மாணவர்களைப் பெற்றுத் தர அன்புடன் வேண்டுகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் எதிர்ப்பார்க்கிறோம். கூடுதல் விவரங்களுக்கு எங்களுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள். ஆண்டவர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,

மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுப்பதினுடைய பெயர்தான் 'revival' அல்லது 'எழுப்புதல்' என்று பெயர்.

நான் 'வருகையின் தூதன்' ஊழியத்தின் முன்னாள் போதகர் மறைதிரு எஸ். தேவதாசன் அவர்களால் உருவாக்கப் பட்டவன். எனவே, என்னை 'வருகையின் தூதன்' ஊழியத்தின் ஒரு 'விளைபொருள்' அல்லது 'பலன்' ஆங்கிலத்தில் 'Product of India Herald of His Coming' என்று அறிமுகம் செய்ததைக் கேட்டீர்கள். 'எழுப்புதல்' என்று சொல்லப்படுவது 'பரிசுத் தாவியானவருடைய ஒரு விளைபொருள்' அல்லது 'பலன்' ஆகும். இது பரிசுத்தாவியானவரால் செய்யப்படுகிறது (Revival is brought out by the Holy Spirit). பரிசுத்த ஆவியானவர் எங்கு செயல்படு கிறாரோ அங்கே தான் எழுப்புதல் உண்டாகவும், செயல்படவும் முடியும். இது மனித செயல் அல்ல. தேவனுடைய செயல். தேவ மக்கள் அல்லாதவர்கள் மத்தியில் இது ஏற்படுவதில்லை.

வலுவிழந்துப் போன தம் பரிசுத்தவான்களை மறுபடியும் தேவன் சந்தித்து பெலனடையச் செய்வதும், பின்மாற்றக்காரர்கள் தெளிவடைந்து சமநிலைக்கு வருவதும், சமுதாயத்தில் தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுதலும், சமுதாயத்திலும், தேசங்களிலும் பரலோ கத்தைப் பற்றிய அறியாமை அகற்றப்பட்டு, ஒரு அசாதாரணமான விழிப்புணர்வு ஏற்படுதலும் இந்த எழுப்புதலில் அடங்கும்.

அசாதாரணமான எழுப்புதலுக்கு அசாதாரணமான ஜெபம் தேவை. உண்மையான எழுப்புதல் நவீன இசைக்கருவிகளிலோ அல்லது அதிக சத்தம் உண்டாக்கும் ஆரவாரங்களிலோ அல்லது நூதனமான நடனங்களிலோ ஏற்படுவ தில்லை. முழங்கால் ஜெபத்தினால்தான் உண்டாகிறது, ஏராளம் சபைகள் நிறைந்த சென்னைப்பட்டணத்தில் சந்திக்கப்படாத ஒரு பகுதியாக இருந்த இடம் தான் நம்முடைய தலைமைச் சபை அமையப் பெற்றுள்ள இடம். சந்திக்கவே முடியாது என்று கருதப்பட்டு பல தேவ மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட இந்த இடத்தைக் குறித்த பாரத்தை தேவன் எனக்குக் கொடுத்தார். இதற்கு நீண்டகால ஜெபமும், காத்திருத்தலும் தேவைப்பட்டன. தேவன் கடைசியாக ஒரு எழுப்புதலைக் கட்டளையிட்டார். அழிவின் பாதையில் சென்றுக் கொண்டிருந்த மக்கள் பலர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டனர், சபை உருவாகியது. ஏராளம்பேர் பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு நம் சபையில் சேர்ந்தனர்.

இங்கு ஏற்பட்ட எழுப்புதலினால், நம் தலைமைச் சபைக்கருகாமையில் அசுத்தமான செயல்களுக்கு வழி உண்டாக்கி, செயல் பட்டுக்கொண்டிருந்த பாரகன், நியூ எல்பின்ஸ்டன், ஸ்டார் மற்றும் வெலிங்டன் ஆகிய சினிமா தியேட்டர்கள் இடிக்கப்பட்டு தற்போது அவ்விடங்களில் வேறு கட்டிடங்கள் எழும்பியுள்ளன. கெட்ட பழக்க வழக்கங்களுக்கும், கொடூரமான செயல்களுக்கும், போதைப் பொருட்களுக்கும், அவலட்சணமான காரியங்களுக்கும் அடிமைகளாக இருந்த எண்ணற்ற மக்கள் மனம் மாறி ஜீவனுள்ள தேவனைத் தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு நம் சபையில் சேர்ந்து வல்லமையான சாட்சிகளாக வாழ்கின்றனர்.

இந்த எழுப்புதலின் தாக்கமானது நிரந்தரமானதா? அல்லது தற்காலிகமானதா? இதைத் தக்க வைத்துக் கொள்வது எப்படி?

உலகத்தின் பல தேசங்களில் இதற்கு முன்னால் அசாதாரணமான எழுப்புதல்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக ஸ்காட்லாந்து, கொரியா போன்ற தேசங்கள் ஆகும்.

ஒரு காலத்தில் ஸ்காட்லாந்து தேசத்திற்காக ஜான் நாக்ஸ் (John Knox) என்ற தேவ மனிதர் ஊக்கமாக ஜெபித்தார். ஆண்டவர் ஒரு பெரிய எழுப்புதலை அனுப்பினார். அதன் விளைவாக அங்குள்ளப் பெருவாரியான மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். தேசத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. பொருளாதார வளர்ச்சி உண்டானது. ஏராளம் சபைக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. எங்குப் பார்த்தாலும் ஜெபக்கூட்டங்களும், ஆவிக்குரிய காரியங்களும் நடந்தன. எண்ணுக் கடங்காத ஆண்களும், பெண்களும் மனந்திரும்பி, சொகுசான வாழ்க்கைகளை உதறித் தள்ளி விட்டு உலகத்தின் பல தேசங்களுக்கு மிஷனரிகளாகச் சென்று சுவிசேஷ ஊழியங்களில் ஈடுபட்டனர். இதன் விளைவாக இந்தியாவிலும், இதர நாடுகளிலும் ஏராளமான கல்விக்கூடங்களும், மருத்துவ மனைகளும், தேவாலயங்களும் கட்டப்பட்டு உலக அளவில் பெரிய சாதனைகளை நிகழ்த்தினார்கள். இன்றைக்கு இந்த தேசத்தின் (Scotland) நிலை என்ன?

சமீபத்தில் ஒருமுறை நான் இந்த ஸ்காட்லாந்து தேசத்திற்குச் சென்றிருந்தபோது அதிர்ச்சியூட்டும் சில சம்பவங்கள் எனக்குக் காத்திருந்தன. அதாவது, அங்கு உண்மையாய் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்கள் மிகவும் சொற்ப எண்ணிக்கையாய் இருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் இயேசு கிறிஸ்து யார் என்றும் கிறிஸ்தவம் என்றால் என்ன என்றும் அறியாதவர்களாக வாழ்கின்றனர். ஏராளமான மிகப்பெரிய உயரமான தேவாலயக் கட்டிடங்கள் ஆண்டவரை அறியாத இதர மார்க்கத்தினருக்கு விற்கப்பட்டு, அவை விக்கிரக ஆராதனை ஸ்தலங்களாகவும், நூதனப் பொருட்களின் வியாபார மையங்களாகவும், சாராயக்கடைகளாகவும், நடன அரங்கங்களாகவும், நாடகக் கூடங்களாகவும், அவலட்சணமான படக்காட்சிக் கூடங்களாகவும், சொல்லப்படக்கூடாத செயல்கள் அரங்கேறும் அரங்கங்களாகவும் காட்சியளிக்கின்றன. இதில் மிகவும் பரிதாபமான நிலை என்னவெனில், தவறான காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் இந்தக் கட்டிடங்களுக்கு மேலே 'சிலுவைச் சின்னங்கள்' இன்னும் காட்சியளிப்பதே.

ஒரு பெரிய அரங்கத்தில் தேவ செய்தி அளிக்கும்படி என்னை அழைத்திருந்த தேவ மனிதர் என்னிடம், "சகோதரரே, இங்குள்ள மக்களுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியோ, கிறிஸ்தவத்தைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. எனவே ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவை அறிமுகம் செய்யக்கூடிய செய்தியை அறிவியுங்கள்" என்றார். எனக்கு இது மிகப்பெரிய வியப்பாக இருந்தாலும், அங்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிய அடிப்படை சத்தியத்தைப் பிரசங்கித்த போது ஏராளமான அந்த தேசத்தார் பாவ உணர்வடைந்து அழுகையோடும், கண்ணீரோடும் முன்னாலே ஓடிவந்து ஆண்டவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டது ஒரு கண் கொள்ளாத காட்சியாக இருந்தது.

இந்த தேசத்தின் பின்மாற்றத்திற்குக் காரணம் என்ன? இந்த மக்கள் ஆதியில் கொண்ட தேவ அன்பை இழந்து விட்டனர். உலகக் கல்வி, பொருளாதார வளர்ச்சி, உல்லாச வாழ்க்கை, போதைப் பொருட்கள் போன்றவற்றால் மக்கள் மதிமயங்கிப் போய் ஜெபத்தை ஒரு அந்நியப் பொருளாகக் கருதி ஜெபத்தையும், பரிசுத்த வாழ்க்கையையும் தங்கள் வாழ்க்கையை விட்டு அகற்றி விட்டனர்.

மாறாக, ஓர் எழுப்புதலை சந்தித்த கொரியா தேசத்தைப் பாருங்கள்.

கொரியா தேசம் பொருளாதாரத்திலும், கல்வியிலும், கலாச்சாரத்திலும் பின் தங்கிப் போன கொடியதோர் சூழ்நிலையில் பால் யாங்கி சோ என்ற தேவ மனிதரை தேவன் எழுப்பினார். அவருடைய ஜெபத்தை தேவன் கேட்டு அந்த தேசத்தில் ஒரு ஆவிக்குரிய உயிர் மீட்சியான எழுப்புதலைக் கட்டளையிட்டார். இந்த எழுப்புதலின் விளைவாக அந்த தேசம் இன்று பொருளாதாரத்திலும், கல்வியிலும், உலக அரங்கில் வளர்ந்தோங்கியிருப்பதோடு, இந்த தேவ ஊழியரும், இந்த தேசத்திலுள்ள தேவ

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : **தமிழ்**

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**
**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org / இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 ஏப்ரல் 19 முதல் மே 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஏப்ரல் 19 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 20 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 21 ⇨ நமது சபை ஊழியங்கள், சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள் போன்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 22 ⇨ நமது தலைமை போதகரின் ஊழியப் பயணத்தை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஏப்ரல் 23 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் **யூடியூப் 5 நிமிட செய்திகள்** மூலம் எழும்புகிற சாட்சிகளுக்காக...

ஏப்ரல் 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மற்றும் **நெகேமியா வேதாகமக்கல்லூரியை** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 25 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** 10-ம் வகுப்பு மாணவர்களை நன்றாக தேர்வு எழுத வைத்த கிருபைக்காக...

ஏப்ரல் 26 ⇨ நமது ஊழியங்களில் தகுதியான புதிய ஊழியர்களை நியமிக்க வைத்த கிருபைக்காக...

ஏப்ரல் 27 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 28 ⇨ 2022-2023ம் நிதியாண்டில் கர்த்தர் செய்த கிருபைக்காக...

ஏப்ரல் 29 ⇨ நமது **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மற்றும் **இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 30 ⇨ நமது ஊழியப் பிரயாணங்களை ஆசீர்வதித்த கிருபைக்காக...

மே 01 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக ...

மே 02 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

மே 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** வெள்ளிவிழா சிறப்புற நடைபெற வைத்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மே 04 ⇨ உலகில் வியாதியின் பிடியில் அகப்பட்டு மருத்துவமனைகளில் நீண்ட நாட்களாக வாடிக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்காக...

மே 05 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூ டியூப் சானலில் புதிய subscribers அதிகரிப்பதற்காக ...

மே 06 ⇨ நமது வட இந்திய மிஷினரிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது உடல்நலத்திற்காகவும் ...

மே 07 ⇨ ஊழியங்கள் மற்றும் மிஷனரிகளுக்கு எதிரான வன்முறைகள் தடுக்கப்படவேண்டி...

மே 08 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து தேவபாதுகாப்பு அளிப்பதற்காக...

மே 09 ⇨ ஜுன் 03, 2023 அன்று நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற வேண்டி...

மே 10 ⇨ உலக சபைகள் அனைத்தும் ஆத்தும ஆதாயம் செய்து எழுப்புதலைக் காண...

மே 11 ⇨ துருக்கி மற்றும் சிரியா தேசங்கள் பூமி அதிர்ச்சியின் பாதிப்புகளிலிருந்து மீண்டு வரவேண்டி...

மே 12 ⇨ நமது சுவிசேஷ அச்சகப் பணிகள் தங்குதடையின்றி நடப்பதற்காக...

மே 13 ⇨ நமது ஊழியத்தின் பொருளாதார தேவைகளை சந்திக்க வேண்டி...

மே 14 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியில்** நடைபெற்று வரும் புதிய பாடத்திட்டத்திற்காகவும், புத்தக மொழிப்பெயர்ப்புக்காகவும்...

மே 15 ⇨ 2023-24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

மே 16 ⇨ 2023-24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

மே 17 ⇨ நமது அனைத்து ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஒரு மனதுடனும், ஒற்றுமையுடனும் பணிபுரிய ...

மே 18 ⇨ நமது ஊழியங்கள் மற்றும் அனைத்து ஸ்தாபனங்கள் அடுத்தக்கட்ட வளர்ச்சியை அடைய...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

மக்களும் தொடர்ந்து ஜெபத்தையும், பரிசுத்த வாழ்க்கையையும் கைவிட்டு விடாமல் அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். எல்லா நாட்களிலும் ஜெபங்கள் எல்லா சபைகளிலும் ஏறெடுக்கப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஜெபிப்பதற்கென பெரிய பெரிய ஜெபக் கூடங்கள் கட்டப்பட்டு, இரவும், பகலும் தொடர்ச்சியாக மாறி மாறி மக்கள் ஜெப தூபங்களைப் பரலோகத்திற்கு ஏறெடுத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இங்குள்ள தேவ ஊழியர்களும், தங்கள் ஆதி அன்பையும், ஜெப வாஞ்சையையும், பிரதிஷ்டையையும் மாற்றாமல், தங்களை சந்தித்த மாபெரும் எழுப்புதலின் விளைவையும், தாக்கத்தையும் இழந்து விடாமல் அவற்றைக் கட்டிக் காக்கின்றனர். இதன் விளைவாக கொரியா தேசம் இக்காலத்தில் ஓர் சிறப்பு வாய்ந்த தேசமாக மாறிவிட்டது. நான் தென் கொரியாவைப் பற்றிப் பேசுகிறேன். இங்கிருந்து எண்ணுக்கடங்காத தேவ ஊழியர்கள் முளைத்து எழும்பி உலகத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

ஆகவே, எழுப்புதலின் வல்லமை ஊற்றப்பட உண்மையான பாவ அறிக்கையும், ஊக்கமான ஜெபங்களும் தேவை. தொடர்ந்து இந்த எழுப்புதலின் வல்லமையைக் கட்டிக் காக்க நேரம் எடுத்து தேசத்திற்காக ஊக்கமாக ஜெபிக்கக் கூடிய தியாக மனப்பான்மையுள்ள தேவ மக்கள் தேவை. இதில் தவறினால், எழுப்புதல் தீ அணைந்து போகும். பலிபீடத்தின் தீ தொடர்ந்து எரியட்டும்!

## உண்மையான எழுப்புதலின் இரண்டு பகுதிகள்!

அ. தேவ மக்களுடைய வாழ்வில் ஏற்படும் உயிர் மீட்சி
(A live revival among God's people)

ஆ. இழந்துபோன தேவனுடைய பிரசன்னத்தைத் திரும்பப் பெறுதல்
(Restoration of God's presence)

## [அ] தேவ மக்களுடைய வாழ்வில் ஏற்படும் உயிர் மீட்சி!

(A LIVE REVIVAL AMONG GOD'S PEOPLE)

ஊக்கமான ஜெபம் அசாதாரணமான எழுப்புதலைக் கொண்டு வரும் (Fervent prayer will bring out a super-natural revival).

“சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் ...” (ரோமர் 12:1,2) என்றும் தேவமக்களுக்கு பரிசுத்த பவுல் அறைகூவல் விடுத்துள்ளார். சபைகளிலும், ஊழிய ஸ்தாபனங்களிலும் பூர்வகால ஆவிக்குரிய அனுபவங்கள் மாறி, நூதனங்களின் தலையீடு தலைதூக்கி விட்டது. தற்கால உபவாச ஜெபங்கள் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களாகவும், தேசத்தின் உயிர்மீட்சிக்கான ஜெபங்கள் ஊழியங்களின் பெயரால் பணம் வேட்டையாடும் கூட்டங்களாகவும் மாறி வருகின்றன. எப்படியாவது நம் தேசம் தேவ வல்லமையால் சந்திக்கப்பட்டு, அராஜகங்களும், ஊழல்களும், சாபங்களும் ஒய வேண்டும் என்ற பாரத்தால் ஜெபிக்கக் கூடிவரும் மக்களைத் தங்கள் வசமாக்கி ஊழியப் பங்காளர்களாக மாற்றும் கூட்டங்களாகவும் மாறிவிட்டன.

எனவே, நம் தேசங்கள் ஒரு ஆவிக்குரிய எழுப்புதலை சந்திக்க வேண்டுமானால், முதலாவது, தேவமக்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கும் அவருடைய சித்தத்துக்கும் ஒப்புக்கொடுத்து, வாழ்க்கையில் மனம் புதிதாகிறதினாலே மறுரூபம் அடைய வேண்டும். (ரோமர் 12:2)

மாறாக, இன்றைய சபைகள் தாங்கள் எதையாவது புதிதாகச் செய்ய வேண்டும் என்ற ஆசையின் விளைவாக தவறான காரியங்களை அறிமுகம் செய்து, அப்பாவி மக்களைத் தங்கள் வசமாக்கிக் கொள்வதை ஒரு பெரிய எழுப்புதல் என்று அறிக்கையிடுகின்றனர். வாழ்க்கையில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் ஏற்படாத வரையில் தேவ மக்களுடைய ஜெபங்களும், சபைகளின் இசைகளும், நடனங்களும், செழிப்பின் உபதேசங்களும், கவர்ச்சிகரமான மேடைகளும், புதிய புதிய ஊழியத் திட்டங்களும் வீணானவை. இன்றைய பிரபலமான ஊழியர்களிடம் நெருங்கிச் சென்றால் அவர்களுடைய உள்ளான மனிதனுக்குள் நிலைகொண்டிருக்கும் கழுவப்படாத அருவருப்பான பண ஆசைகள், பெருமைகள், மேட்டிமைகள், சுயநலங்கள் ஆகிய தீய குணங்களின் துர்நாற்றம் வீசுவதை உணரலாம். தேவ இராஜ்யத்தின் விஸ்தாரத்தை ஒதுக்கி வைத்து விட்டு, ‘என்னுடைய சபை’, ‘என்னுடைய ஊழியம்’, ‘என்னுடைய மிஷனரிகள்’, ‘என்னுடைய தோட்டம்’, ‘என்னுடைய கோபுரம்’ என்று பறை சாற்றிக் கொண்டிருக்கும் நிலை மாறி, தேவன் பார்க்கிற பிரகாரம் நாம் ஒருவரை

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


முழுநேர இந்தி வகுப்புகள்
நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. அதிகாலை ஜெபம் – தினமும் காலை 5.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி, சென்னை
## தேவை

1. **கல்லூரி முதல்வர்**
நெகேமியா வேதாகமக் கல்லூரி,
தகுதி: M. Div. அல்லது M.Th.
2. **கம்ப்யூட்டர் பணியாளர்கள்**
தகுதி : பட்டப்படிப்புடன் கம்ப்யூட்டர் தட்டச்சு

தொடர்புக்கு:
**மின்னஞ்சல் : sam@echoofhiscall.org**
**வாட்ஸ்அப் எண் : +91-98412 71858**

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!
# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)


## அழைப்பின் எதிரொலி அச்சகம்!

1969–1971 ஆண்டுகளில் நான் சிறுவனாக இருந்தபோது, பிரபல 'வருகையின் தூதன்' மாதாந்திரப் பத்திரிகை அலுவலகத்திலும், அதைச் சார்ந்திருந்த தூதன் அச்சகத்திலும், ஓர் சாதாரண அடிப்படை ஊழியனாக, தேவ ஊழியர் மறைதிரு போதகர் எஸ். தேவதாசன் அவர்களிடம் ஊழியம் செய்தேன்.

தேவ ஊழியத்தில் உள்ள பாடுகள், நன்மைகள், முறைகள் ஆகியவற்றை எனக்கு போதகர் அவர்கள் கற்பித்தார்கள். அலுவலகம் மற்றும் நிர்வாகக் காரியங்களையும் கற்பித்தார்கள். வரவு செலவு கணக்குகளை எழுதும்படி ஆடிட்டராக இருந்த திரு. வேதமணி அவர்களிடம் பயிற்சி பெறவும் வைத்தார்கள்.

அப்பொழுது ஊழியத்திற்கென ஒரு அச்சகத்தை போதகர் ஐயா வாங்கினார்கள். ஆரம்பகாலத்தில் திரு. ராஜ் என்ற அச்சக மெக்கானிக் மட்டும் இருந்தார்கள். அந்த அச்சகம் கையினால் இயக்கப்பட வேண்டிய பழங்கால அச்சகம். அதில் உள்ள கைப்பிடியை ஒரு முறை சுற்றினால் ஒரு காகிதம் அச்சிடப்பட்டு வெளியே வரும்.

நான் அதை மிகுந்த சந்தோஷத்துடன் சுற்ற வேண்டியிருந்தது. சுமார் 50,000 முறை நான் சுற்றினால் ஒரு மாத பத்திரிகைப் பிரசுரமாகி வெளியே வரும். இதை நான் ஒவ்வொரு சுற்றும் செய்யும்போதும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தருக்கு





**கையினால் இயக்கப்படும் பழங்கால அச்சக இயந்திரம்**

ஸ்தோத்திரம்! என்று சுமார் 50,000 முறை சொல்வது வழக்கம். போதகர் ஐயா என்னை உற்றுப் பார்த்து உற்சாகப்படுத்துவது வழக்கம்.

மட்டுமின்றி, பாளையங்கோட்டை 'புத்துயிர்' என்ற பத்திரிகை அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்று, அப்பத்திரிகை அச்சிடப்பட்ட அச்சகத்தையும் எனக்குக் காண்பித்தார்கள். அங்குள்ள பழங்கால சிறிய அச்சகத்தையும், அங்கு தரையில் உட்கார்ந்து அப்பத்திரிகைகளை மடித்துக் கொண்டிருந்த மற்றும் கட்டுகளாகக் (Bundle) கட்டி தபால் அலுவலகத்திற்கு தூக்கிச் சென்றப் பணியாளர்களைப் பார்த்தபோது, என் உள்ளத்தில் அப்படியே நானும் ஒரு ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஆசை வந்தது. அப்போது இருந்தே ஒரு சுவிசேஷ அச்சகம் என்ற ஒரு எண்ணம் (Concept) என் உள்ளத்தில் ஏற்பட்டது. பலரிடமும் இதைப் பற்றி கேள்விகளையும், விபரங்களையும் கேட்டுக் கொண்டே இருந்தேன்.

ஒரு முறை சுமார் 100 ஆப்செட் அச்சக இயந்திரத்தை வரிசையாக வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் செல்ல நேர்ந்தது. அதற்கு பொறுப்பானவர் ஒரு தேவ ஊழியர். அவரிடம் இது ஒன்றின் விலை என்ன என்று கேட்டேன். அவர் என்னைப் பார்த்து, "இதைப் பெரிய பணக்காரர்கள் வாங்க முடியும். உன்னால் வாங்கவும் முடியாது! இலவசமாய் ஒருவர் உனக்குக் கொடுத்தாலும் உன்னால் பராமரிக்கவும் முடியாது!" என்றார். இதனால் என் உள்ளம் உடைந்தது. நேரடியாக என் இடத்திற்குச் சென்று முழங்காலில் நின்று ஆண்டவரிடம் இந்த பேச்சுவார்த்தையைச் சொன்னேன்.

என் ஜெபத்தை தேவன் கேட்டார். தொடர்ந்து ஒரு சிறிய பழங்கால அச்சகத்தை தேவன் தந்தார். அதைப்போன்ற ஓர் அச்சகம் தென் ஆப்பிரிக்காவில் உள்ள ப்ளூம்பண்டேன் (Bloemfontein) என்ற இடத்தில் உள்ள அருங்காட்சியகத்தில்தான் (Museum) வைக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு எனக்குத் தேவன் தந்த அச்சக இயந்திரம் மகா பயங்கரப் பழமை வாய்ந்தது. சென்னை வண்ணாரப் பேட்டையில் சகோ. சுந்தரம் அவர்கள் பயன்படுத்தப்பட இயலாத நிலையில் வைத்திருந்த அந்தப் பழைய அச்சகத்தை, எனக்கு சிறிய விலைக்குத் தந்தார்கள்.




தொடர்ந்து ஆண்டவர் என் சுவிசேஷ அச்சக ஊழியத்தை வளர்ச்சியுறப் பண்ணினார். ஆரம்பத்தில் சகோ. மோசஸ் அவர்கள் எங்களின் முதல் அச்சகப் பணியாளராக இருந்தார். இன்று ஒரு பெரிய தானியங்கி ஆப்செட் அச்சக இயந்திரத்தைத் (automatic offset print



தானியங்கி ஆப்செட் அச்சக இயந்திரம்

press) தந்து, அதனைக் கொண்டு நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை 16 மொழிகளிலும், இதர ஆவிக்குரிய புத்தகங்களை பல மொழிகளிலும் அச்சிட்டு இலவசமாக உலகம் முழுவதும் அனுப்ப தேவன் கிருபை செய்துள்ளார்.

இந்த நிலையை எட்ட நான் அதிகமாக பாடுகள் நிறைந்தப் பாதைகளைக் கடக்க வேண்டியிருந்தன. நண்பரே! நீங்களும் பாடுகளின் ஊடாகக் கடந்து செல்கிறீர்களா? தேவன் உங்களுக்குத் தந்த ஊழியங்களை தொடர்ந்து நடத்துங்கள். உங்களுக்கு ஏமாற்றம் வராது.

**... கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை ...**

– 1 கொரிந்தியர் 2:9

***

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருவர் பார்க்க வேண்டும். ஒரு ஊழியர் இன்னொருவரை சந்திக்கும்போது, ஊழியம் என்கிறப் போர்வையில் இவரிடமிருந்து எதைக் கறக்கலாம் அல்லது பெற்றுக் கொள்ளலாம் என்கிற ஒரே நோக்கத்துடன் பழகும் வியாபாரிகளாகவும், பிறர்பொருளை இச்சிக்கிறவர்களாகவும், தங்களுக்கு இருப்பது போதும் என்கிற மனநிலையற்ற வர்களாகவும், தேவ ஊழியர்கள் நிலை தடுமாறிப்போய் விட்டது விந்தையாக இருக்கிறது. இந்த அவல நிலையிலிருந்து தேவ ஊழியர்களும், தேவ மக்களும் மனம் திருந்த வேண்டும்.

## [ஆ] இழந்துபோன தேவனுடைய பிரசன்னத்தைத் திரும்பப் பெறுதல்!

### (RESTORATION OF GOD'S PRESENCE)

கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்குள் தேசங்களில் ஏராளம் புதிய ஊழியர்கள் பெருகிவிட்டனர். ஆனால், மக்களுடைய உள்ளங்களில் புதிய நற்சிந்தனைகள் பெருகுவதற்குப் பதிலாக, குழப்பங்களும், தீய சிந்தனைகளும் மிகவும் பெருகி விட்டனவே...! ஒரே பிரச்சினையின் தீர்வுக்காக வருடக்கணக்கில் ஜெபிக்கும்படி முன்வருகிற மக்கள் பலர் சபைகளிலும், சமுதாயத்திலும் இருக்கின்றனரே!!, ஆத்து மாக்கள் ஆவிக்குரிய திருப்தியடையாமல், சபை சபையாக சுற்றி அலைந்துக் கொண்டிருக்கிறார்களே...!!!

உலக அரசியலை மாற்றியமைக்க வேண்டிய சக்தி படைத்த சபைகள் உலக அரசியலைப் பார்த்து நடு நடுங்கிக் கொண்டிருக்கின்றனவே...!

தேவ ஊழியர்களின் வல்லமையான உபதேசத்தாலும், உபதேச வல்லமையாலும் சாத்தான் நடு நடுங்கிப் போய், சபை மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவத் திட்டம் பெலவீனமடைந்து, தேவ ஊழியத்தின் மகத்துவம் மங்கிப் போய் விட்டதே, ஏன்? தேவன் தம்முடைய பிரசன்னத்தை எடுத்துப் போட்டார் என்பதே உண்மை.

ஆகவே, நாம் எந்த இடத்தில் தேவப் பிரசன்னத்தை இழந்தோம் என்பதையும், எந்த சூழ்நிலையில் ஆதிகால அபிஷேகம் நம்மை விட்டு அகன்றுபோய் விட்டது என்பதையும் ஆராய்ந்து அறிய வேண்டும். சபைகளிலும், குடும்பங்களிலும் ஜெப ஆவியும், விண்ணப்பத்தின் ஆவியும் ஊற்றப்பட வேண்டும். இவை ஊற்றப்படும் போது ஜனங்கள் எழுப்புதலுக்காகக் கதறி அழுவார்கள். அழிந்து போகிற மக்களைக் குறித்த கவலையும், வேதனையும், தேவ ஜனங்களை வாட்டி வதைத்து, இதற்காக எதையும் தியாகம் செய்ய அவர்கள் முன்வரும் நிலை வரவேண்டும்.

இந்தக் காலத்திலேயே இப்படிப்பட்ட ஒரு எழுப்புதலை இந்த உலகம் காண வேண்டும். அதற்காகத்தான் தேவன் நம்மை இந்தக் காலத்தில், இந்த உலகத்தில் வைத்திருக்கிறார். செத்தக் கிரியைகளை யும், சுயநலத்திற்கேதுவான ஊழியங்களை யும் களைந்து, தேவனே என் தேசத்தில் ஒரு மாபெரும் எழுப்புதலின் அறுவடையைத் தாரும் என்று பாரத்துடன் ஜெபிக்க முன் வாருங்கள். செயல்பட உங்கள் கால்களை எடுத்து வையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

************

## விசேஷ ஜெபக்குறிப்புகள்:

1. தலைமைப் போதகர் குடும்பத்திலுள்ள கஷ்டங்கள் மாற வேண்டும்.
2. **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் மாற வேண்டும்.
3. ஊழியத்தரிசனமும், பிரதிஷ்டையும் உள்ள ஊழியர்கள் நம் சென்னை அலுவலகத்திற்கும், கிராம உயர்நிலைப்பள்ளிக்கும், வேதாகமக் கல்லூரிகளுக்கும், அச்சகத்திற்கும், சபைகளுக்கும், மிஷன் களங்களுக்கும் கிடைக்க வேண்டும்.
4. ஊழியர்களுக்கு இடையூறு செய்கிற மக்கள் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும்.
5. வசதியடைந்த தேவ ஊழியர்கள் தங்கள் முன்னேற்றங்களை மட்டும் கருத்திற் கொண்டு செயல்படாமல், ஒரு தேவாலயம் கூட இல்லாத கிராமங்களைக் கண்டறிந்து, ஒவ்வொரு சிறிய தேவாலயங்களைக் கட்டத் தங்கள் பொருளாதாரத்தைப் பயன்படுத்த வேண்டும். ஒரு தேவ ஊழியர் சொன்னார். இன்றைய பெரிய ஊழியர்களில் முடங்கிக் கிடக்கும் ஊழியத்திற்கான செல்வங்களை உண்மையாய் பயன்படுத்தினால் தேசங்களில் உள்ள தேவாலயமே இல்லாத எல்லா கிராமங்களிலும் ஒரு தேவாலயமோ அதற்கு மேலோ கட்டி விடலாம். இதை மனதில் வைத்து ஜெபியுங்கள்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி** (**ECHO OF HIS CALL**) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❀ வருட சந்தா ரூ. 100/–** **❀ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th MARCH 2023**
**If un-delivered please return to:**

**ECHO OF HIS CALL (TAMIL)**

**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**